3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) சில வரிகளை ரத்து செய்யக் கோரி 5—5—1994 அன்று வணிகர்கள் கடையடைப்பு செய்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, இன்று வர்த்தகர் சங்கத்தின் சார்பில் அறிவித்திருக்கின்ற கடையடைப்பு பற்றிய பிரச்சினையை, அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று, திரு. டேனியல்ராஜ் அவர்கள் இன்னொரு பிரச்சினையையும் என்னிடத்தில் கொடுத்திருக்கிறார். அதைப்பற்றிச் சுருக்கமாகத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள வியாபாரிகள், புதிய தொழில் வரி விதிப்பு முறையையும், இருமுனை வரி விதிப்பு முறையையும், குடிசைத் தொழில்களுக்கு விதிக்கப்பட்ட வரியையும் ரத்து செய்யக் கோரி, தமிழ்நாடு முழுவதும், இன்றைய தினம், கடையடைப்புப் போராட்டத்தையும் கண்டன ஊர்வலங்களையும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினையில் திரு. ஞானசேகரன், திரு. தெய்வநாயகம் ஆகிய இருவரும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: உண்ணாவிரதப் போராட்டங்களையும் அறிவித்து, நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக, இன்றையதினம், தமிழகம் முழுவதுமே ஸ்தம்பிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே, இந்த அரசு பொருள்களுக்கு வரிகளை விதிப்பதற்கு முன்னாலேயே, வியாபாரிகள் சங்கத்தினுடைய பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, ஒரு முடிவினை எடுத்திருந்தால், இப்படிப்பட்ட போராட்டங்கள் நடைபெறாமல் தவிர்த்திருக்கலாம் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்திற்கு மட்டும் கொண்டு வாருங்கள். இன்னும் இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. கவனத்திற்குக் கொண்டு வந்தால் போதும், பதில் வாங்குவதற்கு.

திரு. எஸ். டேனியல்ராஜ்: நம்முடைய இந்திய நாட்டைப் பொறுத்தமட்டிலும், கட்டுப்பாடுகளைத் தளர்த்தியும், தாராளமயமாக்குகிற கொள்கையை மத்திய அரசு அறிவித்தும், அவற்றை இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறது. அதே போன்று, வ்யாபாரிகளினுடைய நலனைக் கருதி, முழுமையாக ஏற்றுமதி வரியை, இன்றைய தினத்தில் ரத்து செய்திருக்கிறது. அதே போன்று, இன்றைய தினம் கூட, கையினால் செய்யப்படுகிற சோப்பு, பாத்திரங்கள், கையினால் செய்யப்படுகிற அட்டைப் பெட்டிகள், மருந்து வகைகள் ஆதியவற்றுக்கெல்லாம் முழுமையான வரிவிலக்கையும் அறிவித்திருக்கிறது. நமது அரசைப் பொறுத்த மட்டிலே, இன்று இருமுனை வரியை விதிக்கிறீர்கள். நிதி நிலை அறிக்கையிலே, பட்டியலிலே, அட்டவணையில் பெயரிடப்பட்ட பொருட்களுக்கு இருமுனை வரி விதிக்கிறோம் என்று அறிவித்தீர்கள். அதன் அடிப்படையிலே, ஒரு பொருள் வெவ்வேறு விலையிலும், வெவ்வேறு கம்பெனிகள் மூலமாக விற்கப்படுகிறது. அதாவது, உதாரணத்திற்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரிவாகப் போனால், ஏதோ ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுவது மாதிரி இருக்கும். இன்று கடைசி நாள்; ஏகப்பட்ட பிரச்சினைகளை நாம் இன்னும் எடுக்க வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு)

திரு. எஸ். டேனியல்ராஜ்: இது முக்கியமான பிரச்சினை. தமிழ்நாடு முழுவதுமுள்ள பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக, தமிழ்நாடு பூராவும் கடையடைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் போதும் என்கிறேன்.

பிற்பகல் 12-35

திரு. எஸ். டேனியல்ராஜ்: உதாரணத்திற்கு, சோப்பு, சமையல் எண்ணெய் போன்றவைகள், ஒவ்வொரு பொருளாக, ஒவ்வொரு கம்பெனியின் மூலமாக விற்கப்படுகின்ற அந்தப் பொருள்களுக்கு இந்த இருமுனை வரிகள் மூலமாக வ்யாபாரிகள் ஒவ்வொரு கணக்குகளை வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எவ்வாறு வ்யாபாரிகள் ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனிக் கணக்குகளை வைக்க முடியும் என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த ஆண்டு வரை நூற்றுக்கணக்கான பொருள்களுக்கு அரசு வரிவிலக்குகளை அளித்து வந்தது. உதாரணமாக ஒன்று சொல்கிறேன்: ஏழை எளிய பெண்கள் கூட்டுறவு முறையிலே தங்கள் கையினால் தயார் செய்கின்ற அப்பளம் போன்றவைகளுக்கு இன்றைய தினத்திலே இருமுனை வரி மூலமாக

12 சதவீதம் விதிக்கப்படுகிறது. எம். ஜி. ஆர். ஆட்சிப் பீடத்திலே இருந்த நேரத்திலே இந்தப் பொருள்களுக்கெல்லாம் வரி விதிப்பு தளர்த்தப்பட்டிருந்தது. எதற்கெடுத்தாலும் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பேசுகின்றீர்கள். மத்திய அரசைப் பொறுத்த மட்டிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதையெல்லாம் பில்லிலே பேசலாம். அவர்கள் கடைகளை அடைப்புச் செய்திருக்கிறார்கள். என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்கலாமே தவிர, ஒவ்வொரு பொருளுக்கும் இருப்பது பற்றியெல்லாம் இப்போது வேண்டாம். பில் வருகிறது.

திரு. எஸ். டேனியல்ராஜ்: அடுத்து தொழில் வரியினுடைய முறையைப் பொறுத்தமட்டிலே அமைச்சர் அவர்கள் பழைய முறையைக் கொண்டுவர வேண்டும். ஏனென்றால் புதிய முறையின் மூலமாக 'டர்னோவர் பேசிஸ்' என்ற அடிப்படையிலே வரி விதிப்பதன் மூலமாக அதிகாரிகள் தவறு செய்வதற்கும், அதிகாரிகள் வியாபாரிகளை மிரட்டுவதற்கும் ஒரு வாய்ப்பு உருவாகும். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தமட்டிலே மறுபடியும் வியாபாரிகள் சங்கத்தினுடைய பிரதிநிதிகளை அழைத்துப் பேசி சுமுகமாக இதற்கு ஒரு தீர்வினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே இருமுனை வரி முறையை புதியதாகப் புகுத்துவதுபோல எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு இன்றையதினம் தமிழ்நாட்டிலுள்ள வணிகர்கள் இதனைக் கண்டித்துப் போராட்டம் நடத்துவதாகவும் தெரிவித்திருக்கின்றார்கள். முதலில், இன்று நடப்பது போராட்டம் அல்ல. வரி விதிப்பு முறைக்குக் கண்டனம் அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். ஏறக்குறைய 10 ஆண்டுக் காலமாக தமிழகத்திலுள்ள அனைத்து வணிகர்களும் மே மாதம் 5-ம் தேதியை வணிக தினமாகக் கொண்டாடி வருகிறார்கள். எப்படித் தொழிலாளர்களுக்கு மே தினம் மே 1-ஆம் தேதி அனுசரிக்கப்படுகின்றதோ அது போன்று வணிக தினமாக மே மாதம் 5ஆம் தேதியை அனுசரித்து அவர்களுடைய கோரிக்கைகளை அவர்களுடைய ஒன்றுமையை வலியுறுத்தி பேரணி, பொதுக் கூட்டம் என்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த தினத்தை அனுசரித்து இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நாம் சில வரி விதிப்பு முறைகளை மாற்றி அமைத்திருப்பதை அரசின் கவனத்திற்குக்

கொண்டுவந்து அதில் அவர்களுக்குள்ள சிரமங்களை நீக்க வேண்டுமென்று எண்ணியிருக்கிறார்கள். ஆனால், அந்த எண்ணத்தை அரசுக்கு நேரிடையாக கோரிக்கையாக அவர்கள் வைக்கவில்லை இதுவரையில் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். பத்திரிகை வாயிலாக மூன்று தினங்களுக்கு முன்பு மே 5-ஆம் தேதி வணிக தின விழாவிற்கு கடைகளையெல்லாம் அடைத்துவிட்டு, வணிகர்கள் பேரணியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோள் சில அமைப்புகளின் சார்பில் வெளியிடப்பட்டது. விளம்பரப்படுத்தப் பட்டது. அந்த விளம்பரத்தை நாங்களே பார்த்து தமிழகத்திலுள்ள அனைத்து வணிகர் சங்கங்களினுடைய பிரதிநிதிகளுக்கு வலிய அழைப்பு விடுத்து கடந்த 3-ஆம் தேதி நமது தமிழக அரசினுடைய 10-வது மேல்மாடிக் கட்டிடத்தில் உள்ள குழுக்கள் கூடுகின்ற அறையில் அவர்களோடு கலந்து பேசப்பட்டது. எல்லா மாவட்டங்களிலிருந்தும் முக்கியமான வணிகர் சங்கப் பிரதிநிதிகள் 100-க்கு மேற்பட்டவர்கள் வந்து கலந்து கொண்டார்கள். முதற்கட்டமாக அவர்களுடைய கோரிக்கையைக் கேட்டு, அந்தக் கோரிக்கைகளை இரண்டாவது கட்டமாக ஜூன் மாதம் கலந்து பேசுவது என்று அவர்களிடம் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. அந்த உறுதியை அவர்கள் ஏற்றுக்கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆனால், ஒரு சிலர் இந்த வணிகர் சங்கங்களுக்கு மாநில அளவில் தாங்கள் தலைமை ஏற்க வேண்டும், தலைமையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறவர்கள் இந்த அரசாங்கம் வணிகர் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியதைக்கூட வணிகர்களுக்குத் தெரிவிக்கக் கூடாது, அது பத்திரிகைச் செய்தியாக வரக்கூடாது என்ற விருப்பத்தைக்கூட அவர்கள் சொன்னார்கள். ஏன் என்று கேட்டால் அவர்களுடைய தலைமையில் தமிழ்நாட்டில் உள்ள வணிகர்கள் இன்று கடை அடைப்பு செய்து அவர்கள் பின்னால் அணிவகுத்து நிற்கிறார்கள் என்ற பிரமையை உருவாக்கவேண்டுமென்ற எண்ணத்தில் ஒரு சிலர் அரசியல் நோக்கத்தோடு இதற்குத் தலைமையேற்று நடத்துபவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

இன்றைய தினம், நாம் வரி விதிப்பு முறையில் ஷெட்யூல் 6-ன் கீழ் சில பொருட்களைப் புதிதாக சேர்த்திருக்கிறோம். இன்றைய தினம் உறுப்பினர் சிறப்புக்கவன ஈர்ப்பில் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பற்றிய ஒரு சில விளக்கங்களை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உலக அரங்கில்

குறிப்பாக முன்னேறிய நாடுகளில் பரவலாக உள்ள கூடுதல் மதிப்பீட்டின்கீழ் அதாவது 'வேல்யூ ஆடட் டாக்ஸ்' அதாவது நிர்ணயிக்கப்படும் விற்பனை வரி முறையைக் கடைப்பிடிப்பது சிறந்த வரி விதிப்பு முறைகள் என்று கருதப்படுகிறது. மாறி வரும் காலக்கட்டத்தினைக் கருத்தில் கொண்டு நமது நாட்டில் சூழ்நிலைக்கேற்ப இம்முறை முதல் மற்றும் இரண்டாம் விற்பனை நிலையில் மட்டும் வரி விதிக்கும் வகையில் மாற்றியமைக்கப்பட்டு 28-7-1989 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், வரிவிதிப்புக்கு உட்பட்ட நிலையில் முந்தைய நிலையில் வரி விதிப்புககு உட்பட்ட விற்பனைத் தொகையினைக் கழித்து மீதம் உள்ள விற்பனைத் தொகைக்கு மட்டும் இரண்டாவது நிலையில் வரி விதிக்கப்படுகிறது. விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் எந்த ஒரு பொருள் இரண்டாவது கட்டத்தில் விற்கப் படுகிறதோ அந்தப் பொருளின் முந்தையவிலை என்ன, என்று பார்த்து அந்த மதிப்பைக் கழித்துவிட்டு இரண்டாவது கூடுத லாக விற்கப்படும் தொகைக்கு மட்டுமே வரி விதிக்கப்படு கிறது. இது இரண்டு முனை வரி அல்ல. பலமுனை வரி விதிப்பு முறையும் அல்ல. ஒரு பொருள் எவ்வளவு ரூபாய்க்கு விற்கப்படுகிறதோ அந்தப் பொருளுக்கு அதே விலைக்கு இரண்டு கட்டத்தில் இரண்டு பகுதியாக வரி விதிக்கப் படுகிறது. முதலில் இந்த அட்டவணையில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகள் மட்டுமே இடம் பெற்றன. சென்ற வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்படி 12—3—1993 முதல் பெயரிடப்பட்ட சோடா, குளிர் பானங் கள், ஐஸ்கிரீம் மற்றும் ஷாம்பு ஆகியவை இந்த அட்ட வணையில் சேர்க்கப்பட்டன. முதல் விற்பனை நிலையில் குறைந்த விலையிலும், இரண்டாவது விற்பனை நிலையில் அதிக லாபம் சேர்த்தும், அந்தக் கூடுதல் விலை மதிப் பீட்டுக்கு வரி செலுத்தாமல், வரியை ஏய்க்கும் நோக்கத்தில் வணிகர்கள் செயல்பட்டதால் வரி ஏய்ப்பினைத் தடுக்கும் நோக்கத்துடன் இப்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்த மாற்றத்தின் பலனாக இந்தப் பொருட்களிலிருந்து கிடைத்த வரி 7 சதவிதம் உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு ஆனால் கடந்த ஆண்டு வணிகர்கள் இந்த வரியைச் செலுத்துவதில் இடர்ப் பாடு இருக்கிறது என்று எந்தவிதமான முறையீடோ, கோரிக் கையோ அரசுக்குத்தெரிவிக்கவில்லை. இந்த வரி விதிப்பினை எற் கும் வகையில் செயல்பட்டு வருகிற நிலை இருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி மேலும் 13 பொருட்கள் சேர்க்கபபட்டுள்ளன. இவற்றில் தாவர எண்ணெய், ஏலக் காய், வெட்டப்பட்ட மரம் ஆகியவைகளைப் பொறுத்த வரையில், வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு இந்த மூன்று பொருட்களும் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் குறிப்பிட்ட பொருட்களில் வணிகர்கள் வரி ஏய்ப்பில் அபரிமிதமாக நடந்துக் கொண்டிருக்கிற காரணத்தால் அந்த

1994 மே 5] [திரு. வ. சத்தியமூர்த்தி]

வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டும் என்பதற்காக ஷெட்யூல்
6-ல் இவற்றைக் கொண்டு வந்து சேர்த்து இருக்கிறார்கள்.
என்பதைச் சொல்லியிருக்கிறேன். இவற்றில் தாவர எண்ணெய்
ஏலக்காய் மற்றும் வெட்டப்பட்ட மரங்கள் ஆகியவற்றைப்
பொறுத்தவரையில் வரி ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டும்,
வாசனைத் திரவியங்கள், இயந்திரங்களினால் தயாரிக்கப்படும்
சோப்புகள் போன்றவற்றிற்கு இவ்வாறு விதிக்கப்பட்டிருக்
கிறது. இங்கே உறுப்பினர்கள் பேசுகிறபோது கையினால் தயாரிக்
கப்படுகிற சோப்புக்கு பிற மாநிலங்களில் வரி விலக்கு அளிக்
கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இங்கும் கையினால்
தயாரிக்கப்பட்ட சோப்புக்கு வரிவிலக்கு தொடர்ந்து நீடிக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வாசனைத்
திரவியங்கள், இயந்திரத்தினால் தயாரிக்கப்படும் சோப்புகள்
முகப் பூச்சுகள் பதிவு செய்யப்பட்ட கேஸட்டுகள், வாசனைப்
பாக்கு அலமாரிகள் அலுவலகச் சாதனங்கள், பெயர் இடப்பட்ட
உணவுப் பொருட்கள். மட்டைகள் முதலிய பொருட்கள்
இரண்டாவது விற்பனை நிலையில் சேர்க்கப்படும் கூடுதல்
மதிப்பீட்டின்மீது கிடைக்கவேண்டிய வரி இழப்பினைத்
தடுக்கும்பொருட்டு இந்த அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன.
எனவே, இந்த வரி விதிப்பு முறை இவ்வாண்டு புதிதாக
ஏற்படுத்தப்படுவதல்ல. ஏற்கெனவே சில பொருட்களின் மீது
அமலில் உள்ள முறையே என்றாலும் இரண்டாவது விற்பனை
நிலையில் கூடுதலாகும் விற்பனை மதிப்பீட்டுத் தொகைக்கு
மட்டுமே வரி செலுத்த வேண்டியுள்ளது என்பதையும் மீண்டும்
வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மேலும் இதுபோன்ற வரி
விதிப்பு முறை அமலில் உள்ள அண்டை மாநிலங்கள் கேரளா
மற்றும் கர்நாடகம் ஆகும்.

பிற்பகல் 12-45

அங்கு இதற்கு மாறுதலாக முதல் கட்டத்தில் ஒரு விகிதத்
திலும் கடைசி கட்டத்தில் ஒரு விகிதத்திலும் வரி வசூலிக்
கப்படுகிறது. இந்த இடத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள்
ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். கர்நாடகாவிலும்,
கேரளத்திலும் முதலில் விற்ற விலையை நீக்கி இரண்டாவது
கூடுதல் விலைக்கு மட்டும் வரி விதிப்பது இல்லை. ஒட்டு
மொத்த விலையில் இரண்டாவதும் வரி விதிக்கின்றார்கள்.
ஆனால் வரி விதிப்பு சதவீதத்தைப் பொறுத்தமட்டில்
முதலில் ஒரு சதவீதம் என்றும் இரண்டாவது ஒரு சதவீதம்
என்றும் வேறுபடுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால் நாம்
அப்படி அல்ல. முதலில் விற்ற விலையைக் கழித்துவிட்டு
இரண்டாவது கூடுதலாக விற்றால் அதாவது 100 ரூபாய்க்கு
ஏற்கெனவே வாங்கி இரண்டாவது 130 ரூபாய்க்கு விற்றால்
30 ரூபாய்க்கு மட்டுமே வரிவிதிப்பு செய்கிறோம். இன்னும்
ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள

வேண்டும். இரண்டாவது கட்டம் என்பது அது நேரடியாக கன்ஸ்யூமர்-உபயோகிப்பாளர்கள் வாங்குகின்ற கட்டத்தில் அல்ல உற்பத்தியாளர்களிடம் ஒரு வரி விதிக்கின்றோம். திரும்பவும் முகவர்களிடமிருந்து ஒரு வரி விதிக்கின்றோம். ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் நேரடியாக விநியோகிக்கப்படுவது இல்லை. அது முகவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு, முகவர்கள் மூன்றாவது கட்டமாக மொத்த வியாபாரிகளுக்குக் கொடுத்து மொத்த வியாபாரிகளிடமிருந்து சில்லரை வியாபாரிகள் வாங்கி சில்லரை வியாபாரிகளிடமிருந்து உபயோகிப்பாளர்கள் வாங்குகின்றார்கள். சில்லறை வியாபாரிகள் விற்கும்பொழுது அந்தப் பொருட்களுக்கு வரி விதிப்பதில்லை. உற்பத்தியாளர்கள் அல்லது முகவர்கள் அல்லது மொத்த வியாபாரிகள் ஏதேனும் இரண்டு கட்டத்தில் மட்டும் வரி விதிப்பு செய்கிறோம். எந்தப் பொருள்களிலாவது உபயோகிப்பாளர்களிடமிருந்தும் சில்லரை வியாபாரிகளிடமிருந்தும் வரி விதிப்பு முறை இந்த மாற்றத்தினால் வருகிறது என்று சொன்னால் அதனை அரசு நிச்சயமாகப் பரிசிலித்து அவர்களுக்கு உரிய சிரமத்தை தவிர்ப்பதற்கு தயாராக இருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் முதல்கட்ட விற்பனைத்தொகையைக் கழித்தும் மீதம் இருக்கின்ற கூடுதல் விலை மதிப்புத் தொகைக்கு மட்டும் தமிழக அரசு வரி விதிக்கிறது. கர்நாடகத்தில், மது வகைகள் தவிர, எரி சாராயம், மின் சாதனப் பொருட்கள், ரப்பர் மற்றும் டயர்கள், டியூபுகள், மொசைக் கற்கள் மற்றும் பீங்கான் ஓடுகள், சோடா பானங்கள், புட்டியில் அடைக்கப்பட்ட பானங்கள், சூட்கேஸ்கள் ஆகியவை மீது இந்த இரண்டு கட்ட வரி விதிப்பு அமுலில் உள்ளது. கேரளாவில் 2 கட்ட வரி விதிப்பு சாராயம் மைக்கா பிளைவுட், சூட்கேஸ் குளிர் சாதன பெட்டிகள், துணி துவைக்கும் மின் இயந்திரம் உட்பட 11 இனங்களுக்கு இரண்டு கட்ட வரி விதிப்பு உள்ளது. ஆனால் தமிழ்நாட்டைப் போல் இல்லாமல் ஒவ்வொரு கட்டத்திலும் வரி விகிதம் வேறுபடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புதிய வரி விதிப்பு முறையில் வணிகர்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் நடைமுறைகளை உருவாக்க அவை பற்றிய விரிவான சுற்றறிக்கை அலுவலர்கள் மூலமாக வணிகர் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வணிகர்கள் இந்த வரிவிதிப்பு முறையில் உள்ள சிரமங்களை அந்தந்தப் பொருட்களை தனித்தனியாக வியாபாரம் செய்பவர்கள் தனிப்பட்ட முறையில் வந்து அரசுக்கு பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய சிரமங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த 5-ஆம் தேதி வணிகர்கள் தினம் அனுசரிக்கப்படுவதைத் தொடர்ந்து கடையடைக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்ததை உணர்ந்த இந்த அரசு வணிகப் பிரதிநிதிகளை அழைத்து நான் ஏற்கெனவே 3-ஆம் தேதி பேசியிருக்கிறேன் என்று சொன்னேன். அப்போது அரசு தரப்பில் ஜூன் மாதம்

அவர்களோடு மீண்டும் கலந்து பேசுவது என்று சொல்லப் பட்டிருக்கிறது. தற்போது புதிதாக வரி மாற்றப்பட்டதன் மூலம் ஏதேனும் பிரச்சினைகள், சிரமங்கள் அல்லது கணக்கு வழக்கு பராமரிப்பதில் புதிய சிரமம் ஏற்படுமானால் அதனை எந்த வகையில் அரசு தவிர்க்க இயலும் என்பதை அவர்களுடைய கோரிக்கைகளை முழுமையாக கேட்டு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) விடுமுறைக் காலத்தில் சத்துணவு வழங்கப்படாது என்ற செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை. திரு. சி. ஞானசேகரன். சத்துணவுக் கூடங்கள் பற்றிய பிரச்சி னையை மட்டும் சுருக்கமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். நீங்கள் எழுதிக் கொடுத்தபடி அப்படியே தெரிவிக்க வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லையெனில் ஜகத் தினை அழித்திடுவோம் என்று சொன்னார் பாரதி. ஏழைக் குழந்தைகளின் துயரைத் துடைப்பதற்காக கொண்டு வரப்பட்ட இந்த சத்துணவுத் திட்டத்தில் விடுமுறை நாட்களிலும் கூட சத்துணவு வழங்கப்படும் என்று ஏற்கெனவே இந்த மாமன்றத் தில் அறிவிக்கப்பட்டு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் காலத்திலிருந்து அது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்து கொண் டிருந்தது. ஆனால் இந்த சத்துணவுக் கூடங்களில் பள்ளிகளிலே 2-5-1994ஆம் தேதி முதல் உணவு வழங்கப்படக் கூடாது என்று சத்துணவு அமைப்பாளர்களை எல்லாம் அழைத்து அதிகாரிகள் கையெழுத்து வாங்கிக் கொண்டு 2-ஆம் தேதியி லிருந்து பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படாத நிலை இருக்கிற காரணத்தால் தமிழகத்தில் பல லட்சக்கணக்கான ஏழை எளிய மாணவர்கள் இன்று உணவின்றி வாடுகிறார்கள். ஆகவே மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இம்மாமன்றத்தில் அறிவித்ததைப் போல் பள்ளி விடுமுறை நாட்களிலும்கூட சத்துணவுக் கூடங்களில் சத்துணவு வழங்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்பு கிறேன்.